16.10.2024 MCOP No.45/2017

சாட்சி : PW 1 மனோகரன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் 11.02.2016ம் தேதியில் விபத்துக்கு உள்ளானேன். அப்போது நான் செட்டிநாடு சிமெண்டில் வேலை பார்த்து வந்தேன். எனக்கு 2016ம் ஆண்டு பிப்ரவரி முதல் மே வரை உள்ள நான்கு மாதங்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. அதனை காட்டுவதற்காக என்னுடைய 21016ம் ஆண்டுக்குரிய வங்கிக் கணக்குப்பட்டியலை தாக்கல் செய்துள்ளேன். அது ம.சா.ஆ.7.

**குறுக்கு விசாரணை:**

விபத்திற்கு பின்னர் 29.02.2016ல் என்னுடைய வங்கிக் கணக்கில் சம்பளமாக ரூ.1,06,100/- வரவு ஆகி உள்ளது. நான் மேற்படி தொகையை மாதச் சம்பளமாக வாங்கி வந்தேன் என்று காட்டுவதற்கு சம்பள சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் எனது மருத்துவச்செலவுகளை எந்தக் கணக்கில் இருந்து எடுத்துச் செலவலித்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் தற்போது தாக்கல் செய்துள்ள வங்கிக் கணக்குப்ப ட்டியலில் அதுபற்றி குறிப்பிடவில்லை. எனது மனைவி அரசு பள்ளி ஆசிரியராக உள்ளார். அதனால் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய மருத்துவச் செலவுகள் கிளைம் ஆகிவிட்டன. மருத்துவச் செலவுகளை என் மனைவி எனக்காக பி.எப் லோன் போட்டு செலுத்தியுள்ளார். எவ்வளவு பி.எப்.லோன், எவ்வளவு காப்பீடு என்று குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. விடுமுறையை சரன்டர் செய்து பணம் பெறும் நடைமுறை எங்கள் நிறுவனத்தில் இல்லை. நான் 11.02.2016ல் மருத்துவமனையில் சிகிச்சைக்கை சேர்ந்து 19.02.2016ல் சிகிச்சை முடிந்து டிஸ்சார்ச் செய்யப்பட்டேன். அதன்பிறகுதான் 29.02.2016ல் எனக்கு எங்கள் நிறுவனத்தில் இருந்து சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்றும், நான் சரியாக வேலைக்கு செல்லாததால் தான் சம்பளம் வழங்கவில்லை என்றும், அத்தொகையை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் இழப்பீடாக கேட்கமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்துக்கு பிறகு என்னுடைய சம்பளம் எதுவும் குறைக்கப்படவில்லை. அதனால் எனக்கு இந்த விபத்தினால் சம்பளத்தில் பொருளாதார இழப்பீடு எதுவும் எற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.